DRAF

KEMENTERIAN PELAJARAN MALAYSIA

## KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# BAHASA TAMIL
# (SK)
# தமிழ்மொழி

## TAHAP 1
## படிநிலை 1

# DOKUMEN STANDARD
# KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (KSSR)

## *MODUL TERAS ELEKTIF*

## BAHASA TAMIL SEKOLAH KEBANGSAAN
## தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழி

## TAHAP 1
## படிநிலை 1

**BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM**

Cetakan Pertama 2011
© Kementerian Pelajaran Malaysia

Hak Cipta Terpelihara.  Tidak dibenarkan mengeluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat kebenaran bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pelajaran Malaysia, Aras 4-8, Blok E9, Parcel E, Kompleks Pentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | குறியிலக்கு | 7 |
| 3. | நோக்கம் | 7 |
| 4. | உள்ளடக்க அமைப்பு | 11 |
| 5. | கலைத்திட்டக் குவிவு | 13 |
| 6. | உள்ளடக்கத் தரப் பட்டியல் (ஆண்டு 1-6) | 16 |
| 7. | உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் | |
| | கேட்டல்-பேச்சு | 20 |
| | வாசிப்பு | 24 |
| | எழுத்து | 28 |
| | செய்யுளும் மொழியணியும் | 33 |
| | இலக்கணம் | 35 |
| 8. | ஒன்றாம் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டு வரையிலான செய்யுளும் மொழியணியும் | 37 |
| 9. | ஒன்றாம் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டு வரையிலான இலக்கணம் | 39 |
| 10. | ஒன்றாம் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டு வரையிலான சொற்பட்டியல் | 40 |

## ருக்குன் நெகாரா

- இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
- பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்
- அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்
- சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
- நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

## தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

## முன்னுரை

தொடக்கப்பள்ளிக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டம், ஏட்டுக் கல்விக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் மாணவர்களுக்குச் சுமையில்லாத முழுமையானதொரு கலைத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கலைத்திட்டம் கல்வி மேம்பாட்டுப் பெருந்திட்டத்தின் (**2006 – 2010**) இரண்டாவது கொள்கைக்கேற்பவும் அமைந்துள்ளது.

கலைத்திட்ட மேம்பாட்டுப் பணியானது ஆக்கமிக்கதொரு தொடர்ச்சியான நடவடிக்கையாகும். தொடக்கப்பள்ளிக்கான கே.பி.எஸ்.ஆர். (**KBSR**) கலைத்திட்டம் முதன் முதலாக **1983**ஆம் ஆண்டு உருவாக்கம் கண்டது. இது **1993**ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டமாக மேம்படுத்தப்பட்டு, **2003**ஆம் ஆண்டில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. மேலும், இக்கலைத்திட்டம் **2011**ஆம் ஆண்டில் தற்காலத் தேவைக்கேற்பவும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளவும் தர அடிப்படையிலான ஆவணமாக உருவாக்கம் கண்டுள்ளது.

**பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்ட அமைப்பு**

பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டம், கே.பி.எஸ்.ஆர். கலைத்திட்டக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் தேசியக் கல்வித்தத்துவத்திற்கேற்பவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**தேசியக் கல்வித்தத்துவம்**

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து, சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

**பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான கல்விக் குறியிலக்கு**

**பாலர்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கு**

மாணவர்களைத் தொடக்கப்பள்ளிக்குத் தயார்ப்படுத்தும் வகையில் அவர்களின் ஆற்றலை அனைத்துக் கூறுகளில் வளப்படுத்துவதையும் அடிப்படைத் திறன்களைக் கைவரப் பெறுவதையும் ஆக்ககரமான நடத்தையை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

**தொடக்கப்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கு**

தொடக்கப்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கானது மாணவர்களின் முழுமையான ஆற்றலை மேம்படுத்துவதோடு சமன்நிலை, இணக்கம், உயர்வெண்ணம் ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்றது. மேலும், உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் ஆகிய கூறுகளை உள்ளடக்கிய மாந்தரை உருவாக்கத் துணைபுரிகிறது.

**கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்**

கலைத்திட்ட அமைப்பு அறிவு பெற்ற திறமையான மனித மேம்பாட்டை உருவாக்க வழிவகுக்கின்றது. இதில் அடங்கியுள்ள அடிப்படைக் கூறுகள் உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் கொண்ட சமன்நிலையிலான மனிதர்களை உருவாக்க ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. கலைத்திட்ட அமைப்பிற்கான அடிப்படைக் கூறுகள் பின்வருமாறு:

1. தொடர்பு
2. ஆன்மீகம், நடத்தை, பண்பு
3. மனிதவியல்
4. அறிவியல் தொழில்நுட்ப அறிவு
5. உடலும் முருகுணர்ச்சியும்
6. சால்புடைமை




**விளக்கப் படம் 1 : கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்**

**தர அடிப்படையிலான பயிற்றியக் கலைத்திட்டம்**

பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றிற்கான கலைத்திட்டம் மாணவர்கள் அடைய வேண்டிய உள்ளடக்கத் தர, கற்றல் தரக் கூற்றுகளைக் கொண்டுள்ளது.

**உள்ளடக்கத் தரம்**

வரையறுக்கப்பட்ட பள்ளி கால அளவில் மாணவர்கள் கல்வி தொடர்பான அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் அதன்படி இயங்குவதையும் உறுதிப்படுத்துவதே உள்ளடக்கத் தரமாகும்.

**கற்றல் தரம்**

ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்திற்கேற்பத் தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றை உறுதி செய்வதே கற்றல் தரமாகும்.

**பயிற்றி வகை**

மாணவர்கள் கைவரப்பெற வேண்டிய அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகள் உள்ளடக்கத் தர, கற்றல் தர வாயிலாக ஒருங்கிணைத்துப் பயிற்றியில் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பயிற்றியானது பிரதான அடிப்படைப்பயிற்றி, பிரதான கருப்பயிற்றி, தெரிவுசெய் பயிற்றி ஆகிய மூன்றையும் உள்ளடக்கியுள்ளது.

### அ) பிரதான அடிப்படைப் பயிற்றி

பிரதான அடிப்படைப் பயிற்றியில் வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல், சீர்தூக்கிப்பார்த்தல் ஆகிய திறன்களை மாணவர்கள் கைவரப்பெறுவதற்காக அறிவு சார்ந்த துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்றியில் மொழி ( தமிழ், மலாய், ஆங்கிலம், சீனம்), கணிதம், உடல் நலக்கல்வி, இஸ்லாமியக்கல்வி, நன்னெறிக்கல்வி ஆகியவை இடம் பெற்றுள்ளன.

### ஆ) பிரதான கருப்பயிற்றி

பிரதான கருப்பயிற்றி, கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகளோடு ஆக்கச்சிந்தனை, ஆய்வுச்சிந்தனை, புத்தாக்கச்சிந்தனை ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

### இ) தெரிவுசெய் பயிற்றி

தெரிவுசெய் பயிற்றி, தேசியப்பள்ளியில் தமிழ், சீனம், அரபு, கடசான் டுசுன், இபான், ஆகிய மொழிகளைக் கூடுதல் பாடங்களாக வழங்குகிறது. மாணவர்கள் இப்பாடங்களுள் ஒன்றனைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

**தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழிக் கலைத்திட்டம்**

தேசியப்பள்ளியில் தமிழ்மொழி கூடுதல் மொழியாகவும் இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் அணுகுமுறையிலும் அமைந்துள்ளது. தேசியப்பள்ளியில் தமிழ்மொழியானது தொடர்பு கொள்ளும் திறனை வளர்ப்பதோடு அம்மொழியைக் கற்பதற்கான வலுவான அடிப்படையையும் அமைத்துக் கொடுக்கிறது. மேலும், இத்திட்டம் நன்னெறிப் பண்பு, அறிவு வளர்ச்சி, நாட்டுப் பற்று, ஒற்றுமையுணர்வு முதலியன சமூகத்தில் உருவாகுவதற்கு வழிகாண்கிறது.

தேசியக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவரின் அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளில் சமச்சீர் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்மொழி வாயிலாகப் பிறருடன் தொடர்பு கொள்ளவும் தம் கருத்தைச் செம்மொழியில் வெளிப்படுத்தவும் இக்கலைத்திட்டம் வழிகாண்கிறது.

தேசியப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியை அடிப்படை நிலையிலிருந்து கற்பர். ஆகவே, தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டத்தின் உள்ளடக்கமானது மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதாகவும் இன்றைய சமுதாய வளர்ச்சிக்கு ஏற்புடையதாகவும் அமைந்துள்ளது. மேலும், இக்கலைத்திட்டம் மலேசிய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை முறையில் அடங்கியுள்ள குடியியல் கூறுகளையும் நாட்டுப்பற்றையும் முதன்மையாகக் கொண்டுள்ளது.

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக்கான தர ஆவணத்தில் குறியிலக்கு, நோக்கங்கள், உள்ளடக்கத் தரம், கற்றல் தரம், இலக்கணம் ஆகிய கூறுகளோடு செய்யுளும் மொழியணியும் இடம்பெற்றுள்ளன. இத்தர ஆவணம் அடிப்படை மொழித்திறன்களோடு நல்லொழுக்கம், தன்மதிப்பு, தன்னம்பிக்கை, தலைமைத்துவ ஆற்றல், நாட்டுப்பற்று, ஆன்மீகம் ஆகியவற்றை வளர்ப்பதிலும் துணை நிற்கின்றது. மேலும், தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் மிகுந்த பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய இது உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, வரையறுக்கப்பட்டுள்ள உள்ளடக்கத் தரம், கற்றல் தரம் ஆகியவற்றை மாணவர்கள் அடைவதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டம், மாணவர்கள் மொழித்திறன்களைக் கைவரப்பெற்றுச் சிறப்பாகப் பயன்படுத்த துணைபுரிகின்றது. ஆகவே, ஆசிரியர்கள் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடும்போதும் பயிற்றுத்துணைப் பொருள்களைத் தயார் செய்யும் போதும் தனியாள் வேற்றுமைகள், பல்வகை கற்றல் பாணிகள், பல்வகை நுண்ணறிவுகள் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். இது மாணவர்களின் அறிவாற்றலையும் ஆளுமையையும் மேம்பாடடையச் செய்யும்.

**குறியிலக்கு**

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவர்கள் தமிழ்மொழி வாயிலாகத் தொடர்பு கொள்ளும் திறனைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் தமிழ்மொழியைப் பயன்படுத்தவும் சமூகத் தொடர்பினை ஏற்படுத்தவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் வழிவகுக்கின்றது. மேலும், மாணவர்களுக்கிடையே நன்னெறி, நாட்டுப்பற்று, ஒற்றுமை ஆகியவற்றை வளர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

**நோக்கம்**

**தேசியப்பள்ளி தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தலின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை :**

i. அன்றாட உரையாடலிலும் முறையான சூழல்களிலும் பேசப்படும் கருத்துகளைக் கவனமுடன் செவிமடுத்துப் புரிந்து கொள்ளுதல்.

ii. பல்வேறு சூழலுக்கேற்பச் சரியான உச்சரிப்புடன் சரளமாகப் பேசுதல்.

iii. கருத்துகளைத் திரட்ட கலந்துரையாடுதல்; விவாதித்தல்.

iv. அறிவு, இலக்கியம் சார்ந்த பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்தல்; கருத்துகளைத் திரட்டி ஆக்கப்பூர்வமாகப் பரிசீலித்தல்.

v. பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றின் மூலம் நன்னெறிப் பண்பை வளர்த்தல்.

vi. பெற்ற அனுபவங்களையும் அறிவையும் பயன்படுத்தி எழுத்துப் படிவங்களைப் படைத்தல்.

vii. செய்யுள் மொழியணியின் பொருளை அறிந்து உய்த்துணரவும் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ளுதல்.

viii. பல்வேறு நடவடிக்கைகளில் சரியான உச்சரிப்பு, எழுத்து, கலைச்சொற்கள், இலக்கணம், ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்துதல்.

**தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி ஆண்டு ஒன்றின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை :**

i. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளுதல்.

ii. சூழலுக்கேற்பப் பண்புச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.

iii. தமிழ் எழுத்துகளை முறையாக ஒலித்தல்.

iv. சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்.

v. நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் பிழையின்றி எழுதுதல்.

vi. எளிய வாக்கியங்களைப் பிழையற எழுதுதல்.

vii. செய்யுளையும் மொழியணியையும் அறிதல்.

viii. இலக்கண அறிவைப் பெறுதல்.

**தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி ஆண்டு இரண்டின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை :**

i. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளுதல், அதற்கேற்பத் துலங்குதல்.

ii. சூழலுக்கேற்பப் பண்புச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.

iii. சொற்களைச் சரியாக ஒலித்தல்.

iv. சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்.

v. நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் பிழையின்றி எழுதுதல்.

vi. மூன்று சொற்கள் கொண்ட வாக்கியம் அமைத்தல்.

vii. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துதல்.

viii. அடிப்படை இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.

**தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் வழி ஆண்டு மூன்றின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை :**

i. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளுதல்.

ii. சூழலுக்கேற்பப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.

iii. வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசித்தல்.

iv. சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்.

v. கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுதல்.

vi. நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் பிழையின்றி எழுதுதல்.

vii. வாக்கியம் அமைத்தல்.

viii. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துதல்; எழுதுதல்.

ix. அடிப்படை இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.

## உள்ளடக்க அமைப்பு

தொடக்கப்பள்ளிக்கான தமிழ்மொழித் தர ஆவணம் மாணவர்கள் அடைய வேண்டிய உள்ளடக்கத் தரத்தையும் கற்றல் தரத்தையும் வலியுறுத்துகின்றது. இத்தர ஆவணம் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இலக்கணக் கூறுகளையும், செய்யுளையும் மொழியணியையும் ஒருங்கிணைப்பதுடன் கலைத்திட்டத்தின் உள்ளீடுகளையும் துணைப்பொருளாகக் கொள்கின்றது.

## கேட்டல் திறன்

கேட்டல் திறனில் மாணவர்கள் பல்வேறு சூழல்களில் உன்னிப்பாகச் செவிமடுத்தும் ஒலி வேறுபாடு அறிந்து கொண்டும் செவிமடுத்தவற்றின் பொருளைப் புரிந்து கொண்டும் துலங்குவர்.

## பேச்சுத் திறன்

பேச்சுத் திறனில் மாணவர்கள் நல்ல மொழியில் உரையாடிப் பிறருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதோடு, சிந்தித்துத் தங்களின் கருத்துகள், எண்ணங்கள், தகவல்கள் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் தெளிவுடனும் பிறருக்குக் கூறுவர்.

## வாசிப்புத் திறன்

வாசிப்புத் திறனில் மாணவர்கள் சரளமாகவும் சரியான உச்சரிப்புடனும் உரக்க வாசிப்பர். மேலும், பல்வேறு உத்திகளைக் கையாண்டு ஆய்வுச் சிந்தனையுடன் வாசித்துக் கருத்துணர்வர்.

## எழுத்துத் திறன்

எழுத்துத் திறனில் மாணவர்கள் எழுத்துப் பிழையின்றி, இலக்கண அமைதியுடன் நல்ல கையெழுத்தில் எழுதுவர். மேலும், சிந்தனைத்திறன்களைப் பயன்படுத்தித் தங்களுடைய எண்ணங்களையும் கருத்துகளையும் கற்பனை வளத்துடன் படைப்பர்.

**செய்யுளும் மொழியணியும்**

செய்யுள், மொழியணி ஆகியவற்றின்வழி மாணவர்கள் வரையறுக்கப்பட்ட இலக்கியப் பகுதிகளை அறிந்து உய்த்துணர்வதோடு வளமான மொழியாற்றலுடன் படைப்புகளை உருவாக்குவர்.

**இலக்கணம்**

தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் இலக்கண அறிவைப் பெற்று அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவர்.

**மொழிமுறைமை**

மொழிமுறைமை மொழி செயற்படும் விதத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக மொழிமுறைமையில் இலக்கணக் கூறுகள், செய்யுள், பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி போன்றவை வரையறுக்கப்பட்டுள்ளன.

**சொற்களஞ்சியம்**

அருஞ்சொற்களும் கலைச்சொற்களும் இந்தச் சொற்களஞ்சியத்தில் அடங்கும். நாட்டின் மேம்பாட்டிற்கேற்பவும் கல்வி, மொழி வளர்ச்சிக்கேற்பவும் தொடக்கப்பள்ளியில் சொற்களஞ்சியம் பெருக்கப்பட வேண்டும்.

**பாடவேளைக்கான பரிந்துரை**

தர அடிப்படையிலான இப்புதிய கலைத்திட்டத்தில் அடிப்படை மொழித்திறன்கள் தனித்துக் கற்பிக்க வலியுறுத்தப்படுகின்றது. இது சிறப்பாக அமைய ஒரு வாரத்தில் உள்ள 3 பாட வேளைகளில் கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பாடவேளை பயன்படுத்தப் பட வேண்டும். 2 அல்லது 3 வாரங்களுக்கு ஒருமுறை அடிப்படை மொழித்திறன்களில் ஏதாவது ஒன்றனைத் தவிர்த்து, செய்யுள் மொழியணியோ இலக்கணமோ கற்பிக்கப் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**கலைத்திட்டக் குவிவு**

இக்கலைத்திட்ட உள்ளடக்கம் தமிழ்மொழியின் சிறப்பிற்கேற்பக் கற்றல்கற்பித்தலைச் செம்மைப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு அறிவுத்துறையைச் சார்ந்த ஏதுகளை உள்ளடக்கமாக எடுத்தாள்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

**பொதுவறிவு**

குறிப்பிட்ட திறன்களை மேம்படுத்துவதற்காக எடுத்தாளப்படும் அறிவியல், புவியியல் போன்ற பிற பாடத்துறைகளின் உள்ளடக்கமே பொது அறிவுக்கூறாகும். மேலும், மாணவர்களின் அறிவாற்றலை வளர்க்க நடப்புச் செய்திகளைக் கற்றல் கற்பித்தலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**நற்பண்பு**

ஒழுக்கமுடைய நல்ல மாணவரை உருவாக்கும் நோக்கத்தில் தமிழ்மொழிக் கல்வியில் நற்பண்புகளை விளக்கும் கூறுகள் இணைக்கப்பட்டுள்ளன. நற்பண்புகளை அன்றாட வாழ்க்கையில் ஏற்றுக் கடைப்பிடிப்பதன்வழி நல்ல இளைய தலைமுறையினரை உருவாக்க முடியும்.

**குடிமை**

நாட்டுப்பற்றையும் குடிமையுணர்வையும் கற்றல்கற்பித்தலில் வலியுறுத்தி தாய் நாட்டின் மீது அன்பும் பற்றும் வளரத் துணைபுரிய வேண்டும். இதன்வழி நாட்டுப்பற்றும் கடமையுணர்வும் கொண்ட நற்குடிமக்களை உருவாக்க முடியும்.

**சமுதாய பண்பாட்டு நெறிமுறைகள்**

மொழிப்பயன்பாட்டில் அடங்கியுள்ள மொழிப்பண்பு, மொழிநடை ஆகியவை சமுதாய பண்பாட்டு நெறிமுறைக் கூறுகளின் உள்ளடக்கங்களாகும். இவற்றில் மலேசியச் சமுதாயத்தின் நன்னெறிப் பண்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**புதிய நூற்றாண்டில் மதிப்புயர்வு தரும் திறன்கள்**

மாணவரின் அன்றாட வாழ்க்கைச் சூழல்களுக்கும் உலக நிகழ்வுகளுக்கும் ஏற்ற வகையில் வகுப்பறை அனுபவங்கள் அமைய இத்தர ஆவணம் முக்கியத்துவம் வழங்குகின்றது. இக்கால கற்றல்கற்பித்தல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டுத் தமிழ்மொழித் தர ஆவணத்தில் சிந்தனைத்திறன், பல்வகை நுண்ணறிவு, வாழ்நாள் முழுவதும் கற்கும் திறன், எதிர்காலவியல் ஆகிய திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இவை மதிப்புயர்வு தரும் திறன்களாகக் கருதப்படுகின்றன.

**சிந்தனைத்திறன்**

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்கள் நடவடிக்கைகளின் வாயிலாகவும் வினாக்களின் வாயிலாகவும் ஆக்கச் சிந்தனையையும் ஆய்வுச் சிந்தனையையும் தூண்டும் நடவடிக்கைகளின் வாயிலாகவும் சிந்தனைத்திறன்கள் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் எதிர்காலத்தில் அன்றாட வாழ்வுக்கும் தம் தொழிலில் ஏற்படும் சிக்கல்களைக் களையவும் அவற்றைப் பற்றிய முடிவுகளை எடுக்கவும் சிந்தனைத்திறன் இன்றியமையாததாகும்.

**பல்வகை நுண்ணறிவு**

மொழித்திறன், ஏரணம், இசை, இயக்கம், இடம், தன்னறி, சமூகம், இயற்கையியல் போன்றவை பல்வகை நுண்ணறிவுகளாகும். மாணவரிடம் காணப்படும் பல்வேறு நுண்ணறிவுகளை அடையாளம் கண்டு அவற்றிற்கேற்ப விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**வாழ்நாள் முழுவதும் கற்கும் திறன்**

வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தேவைப்படும் கற்றல் திறனைக் கைவரப்பெற்றிருப்பது அவசியமாகும். இத்திறனைக் கைவரப்பெற்றிருக்கும் மாணவர்கள் காலத்திற்கேற்ப அறிவை வளப்படுத்திக் கொள்வதோடு விரைவான மாற்றத்தை அடைந்துவரும் உலகியல் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலையும் பெற்றிருப்பர்.

**எதிர்காலவியல்**

எதிர்காலவியல் என்பது கடந்த கால, நிகழ்கால, எதிர்கால நடப்புகளையும் சிக்கல்களையும் உணரும் வகையில் மேற்கொள்ளப்படும் கற்றல் அணுகுமுறையாகும். இதன்வழி மாணவர்கள் நடந்தவற்றிலிருந்து நடக்கவிருப்பதை அனுமானித்து அதன் விளைவை ஊகித்து அதற்கேற்பத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வர்.

**விரவி வரும் கூறுகள்**

விரவி வரும் கூறுகளாகத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன், தொழில்முனைப்புத் திறன், ஆக்கமும் புத்தாக்கமும் ஆகியன இத்தர ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

**தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன்**

தகவல் தொடர்புத் தொழில்நுட்ப யுகத்தில் மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் அன்றாடப் பணிகளை நிறைவு செய்ய மென்பொருள்களைப் பயன்படுத்தவும் இணையத்தில் கிடைக்கப்பெறும் தகவல்களைத் திரட்ட கணினியைப் பயன்படுத்தும் அறிவையும் மாணவர்கள் பெற்றிருப்பது அவசியமாகும்.

**தொழில்முனைப்புத் திறன்**

கற்றல்கற்பித்தலில் தொழில்முனைப்புத் திறன் இணைக்கப்படுவதன் வழி இத்திறன் மாணவர்களிடையே ஒரு வாழ்வியல் பண்பாடாக உருவெடுக்கத் தொடக்கப்பள்ளிக்கான தர ஆவணம் வழிவகுக்கிறது. தொழில் முனைப்புத்திறனை அன்றாட வாழ்க்கையில் வழக்கப்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் தொழில் முனைவருக்கு இருக்க வேண்டிய தொழில் முனைப்புச் சிந்தனை, வாணிப நிர்வாகத்திறன், தொழில்நுட்பப் பயன்பாடு, தொழில்முனைப்புக் கோட்பாடு, நன்னெறிப் பண்பு ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

**ஆக்கமும் புத்தாக்கமும்**

ஆக்கம் என்பது தனிமனிதர் ஒருவர் உருவாக்கும் ஆற்றல், தீர்வு காணும் திறன், கற்பனையாற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்திப் புதியதொன்றை உருவாக்குவதாகும். புத்தாக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழலின் ஆக்ககரமான சிந்தனை வெளிப்பாட்டினையும் பயன்பாட்டினையும் குறிக்கின்றது. சால்பும் திறமும் பெற்ற மனித மூலதனத்தை உருவாக்குவதற்கு ஆக்கமும் புத்தாக்கமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. ஆக்க, புத்தாக்கச் சிந்தனையை மேலோங்கச் செய்வதன்வழி ஒருவர் தரமான படைப்புகளை உருவாக்கும் ஆற்றலைப் பெறுவார். இதுவே எதிர்காலத்தில் மலேசியர்களின் அன்றாட வாழ்வியல் முறையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழி உள்ளடக்கத் தரப் பட்டியல்
# ஆண்டு 1 – 6

| கேட்டல் பேச்சு | |
|---|---|
| 1.1 | எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். |
| 1.2 | சொற்களைச் சரியாக உச்சரிப்பர். |
| 1.3 | செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். |
| 1.4 | கேள்விகளுக்குச் சரியான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைக் கொண்டு பதில் கூறுவர். |
| 1.5 | பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர். |
| 1.6 | தகவல்களைக் கூறுவர். |

| வாசிப்பு | |
|---|---|
| 2.1 | சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.2 | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.3 | அருஞ்சொற்களின் பொருளை அறிவர். |
| 2.4 | வாசித்துப் புரிந்து கொள்வர். |

| எழுத்து | |
|---|---|
| 3.1 | நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். |
| 3.2 | சொல்வளம் பெருக்கிக் கொள்வர். |
| 3.3 | வாக்கியம் அமைப்பர். |
| 3.4 | கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். |
| 3.5 | சொல்வதை எழுதுவர். |
| 3.6 | கருத்துகளைக் கோவையாக எழுதுவர். |

| செய்யுளும் மொழியணியும் | |
|---|---|
| 4.1 | ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.2 | கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.3 | உலகநீதியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.4 | திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.5 | இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.6 | உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.7 | இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.8 | மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.9 | பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |

| இலக்கணம் | |
|---|---|
| 5.1 | எழுத்திலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.2 | கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.3 | சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.4 | வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.5 | வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

# உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும்

## 1.0 கேட்டல்,பேச்சு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 1.1 எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | 1.1.1 உயிர் எழுத்துகளையும் ஆய்த எழுத்தையும் சரியாக ஒலிப்பர். | | |
| | 1.1.2 வல்லின மெய்யெழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |
| | 1.1.3 மெல்லின மெய்யெழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |
| | 1.1.4 இடையின மெய்யெழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |
| | 1.1.5 வல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |
| | 1.1.6 மெல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |
| | 1.1.7 இடையின உயிர்மெய் எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |
| | 1.1.8 குறில்,நெடில் எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| | 1.1.9 கிரந்த எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். | | |
| 1.2 சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.1 உயிரெழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.7 இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.15 மெய்யெழுத்தைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக உச்சரிப்பர். |
| | 1.2.2 மெய்யெழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.8 இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.16 உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக உச்சரிப்பர். |
| | 1.2.3 உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.9 சந்தச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.17 லகர, ழகர, ளகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக உச்சரிப்பர். |
| | 1.2.4 கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.10 குறில், நெடில் ஓசைச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.18 ரகர, றகர, எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக உச்சரிப்பர். |
| | 1.2.5 ஓரெழுத்துச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.11 மூவெழுத்துச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.19 ணகர, நகர, னகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக உச்சரிப்பர். |
| | 1.2.6 ஈரெழுத்துச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.12 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.20 இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக உச்சரிப்பர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| | | 1.2.13 ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.21 இனவெழுத்துகள் கொண்ட சொற்றொடர்களைச் சரியாக உச்சரிப்பர். |
| | | 1.2.14 ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பர். | 1.2.22 பால் தொடர்பான சொற்களை அறிந்து சரியாக உச்சரிப்பர். |
| | | | 1.2.23 ஒருமை,பன்மை தொடர்பான சொற்களை அறிந்து சரியாக உச்சரிப்பர். |
| | | | 1.2.24 எதிர்ச்சொற்களை அறிந்து சரியாக உச்சரிப்பர். |
| 1.3 செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | 1.3.1 செவிமடுத்த எழுத்தைச் சரியாக ஒலிப்பர். | 1.3.4 செவிமடுத்த கட்டளையைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | 1.3.8 செவிமடுத்த சந்தப்பாடலைச் சரியாகப் பாடுவர். |
| | 1.3.2 செவிமடுத்த சொல்லைச் சரியாகக் கூறுவர். | 1.3.5 செவிமடுத்த வேண்டுகோளைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | |
| | 1.3.3 செவிமடுத்த சொற்றொடரைச் சரியாகக் கூறுவர். | 1.3.6 செவிமடுத்த வாக்கியங்களைச் சரியாகக் கூறுவர். | |
| | | 1.3.7 செவிமடுத்த பாடலைச் சரியாகப் பாடுவர். | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 1.4 கேள்விகளுக்குச் சரியான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைக் கொண்டு பதில் கூறுவர். | | | 1.4.1 என்ன, எத்தனை எனும் வினாச் சொற்களுக்கேற்பப் பதில் கூறுவர். |
| | | | 1.4.2 யார், எது எனும் வினாச் சொற்களுக்கேற்பப் பதில் கூறுவர். |
| 1.5 பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர். | 1.5.1 மரியாதைச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர். | 1.5.4 வடிவத்தையும் வண்ணத்தையும் அறிந்து கூறுவர். | 1.5.6 அறுசுவையை அறிந்து கூறுவர். |
| | 1.5.2 குடும்ப உறுப்பினர்களின் உறவுப் பெயர்களை அறிந்து கூறுவர். | 1.5.5 உறவினர்களின் உறவுப் பெயர்களை அறிந்து கூறுவர். | 1.5.7 பேச்சு வழக்குச் சொற்களைச் சரியாகப் பேசுவர். |
| | 1.5.3 கிழமைகளின் பெயரை அறிந்து கூறுவர். | | |

## 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 2.1 சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.1 உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.10 குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.24 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | 2.1.2 மெய்யெழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.11 நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.25 க்க, ச்ச, ட்ட ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | 2.1.3 வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.12 சந்தச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.26 ண்ண, ன்ன ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | 2.1.4 மெல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.13 க்க, ச்ச, ட்ட ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.27 ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | 2.1.5 இடையின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.14 படம் தொடர்பான சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.28 ங்க, ஞ்ச ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | | கற்றல் தரம் ஆண்டு 2 | | கற்றல் தரம் ஆண்டு 3 | |
|---|---|---|---|---|---|---|
| | 2.1.6 | கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.15 | ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.29 | ண்ட, ந்த ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | 2.1.7 | ஓரெழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.16 | ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.30 | ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | 2.1.8 | ஈரெழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.17 | ங்க, ஞ்ச ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.31 | த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | 2.1.9 | மூவெழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.18 | ண்ட, ந்த ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.32 | ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | | | 2.1.19 | ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.33 | ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| | | 2.1.20 ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.34 மெய்யெழுத்தைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | | 2.1.21 த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.1.35 உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | | 2.1.22 ண்ண, ன்ன ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | |
| | | 2.1.23 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | |
| 2.2 வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். | | 2.2.1 சந்தப்பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.2.2 கேலிச்சித்திரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். |
| | | | 2.2.3 உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 2.4 வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.4.1 சொல்லை வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.4.3 இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.4.5 வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர். |
| | 2.4.2 சொற்றொடரை வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.4.4 மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர். | |

## 3.0 எழுத்து

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 3.1 நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | 3.1.1 சுழி, கொம்பு, விலங்கு ஆகியவற்றைச் சரியான அளவுடனும் வரிவடிவத்துடனும் தூய்மையாக எழுதுவர். | 3.1.10 சொற்களைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | 3.1.12 வாக்கியங்களைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். |
| | 3.1.2 உயிர் எழுத்துகளையும் ஆய்த எழுத்தையும் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | 3.1.11 சொற்றொடர்களைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | |
| | 3.1.3 வல்லின மெய்யெழுத்துகளைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | | |
| | 3.1.4 மெல்லின மெய்யெழுத்துகளைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | | |
| | 3.1.5 இடையின மெய்யெழுத்துகளைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | | |
| | 3.1.6 வல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| | 3.1.7 மெல்லின உயிர்மெய் எழுத்துகளைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | | |
| | 3.1.8 இடையின உயிர்மெய் எழுத்துகளைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | | |
| | 3.1.9 கிரந்த எழுத்துகளைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | | |
| 3.2 சொல்வளம் பெருக்கிக் கொள்வர். | 3.2.1 ஓரெழுத்துச் சொற்களை எழுதுவர். | 3.2.12 குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.19 இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.2.2 ஈரெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.13 நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.20 இனவெழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.2.3 மூவெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.14 ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.21 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.2.4 உயிர் எழுத்தைக் கொண்டு தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.15 லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.22 ஒருமை, பன்மை சொற்களை அறிந்து எழுதுவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம்<br>ஆண்டு 1 | | கற்றல் தரம்<br>ஆண்டு 2 | | கற்றல் தரம்<br>ஆண்டு 3 | |
|---|---|---|---|---|---|---|
| | 3.2.5 | கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.16 | ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.23 | ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.2.6 | வல்லின மெய்யெழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.17 | உயிர் எழுத்தைக் கொண்டு தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.24 | ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.2.7 | வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.18 | இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | 3.2.25 | எதிர்ச்சொற்களை அறிந்து எழுதுவர். |
| | 3.2.8 | மெல்லின மெய்யெழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | | | | |
| | 3.2.9 | மெல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | | | | |
| | 3.2.10 | இடையின மெய்யெழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | | | | |
| | 3.2.11 | இடையின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். | | | | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம்<br>ஆண்டு 1 | கற்றல் தரம்<br>ஆண்டு 2 | கற்றல் தரம்<br>ஆண்டு 3 |
|---|---|---|---|
| 3.3 வாக்கியம் அமைப்பர். | 3.3.1 எளிய வாக்கியம் அமைப்பர். | 3.3.2 மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியம் அமைப்பர். | 3.3.3 மெய்யெழுத்தைக் கொண்ட சொற்றொடர்கள் அடங்கிய வாக்கியம் அமைப்பர். |
| | | | 3.3.4 உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்றொடர்கள் அடங்கிய வாக்கியம் அமைப்பர். |
| | | | 3.3.5 ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைப்பர். |
| | | | 3.3.6 ஒருமை, பன்மை சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைப்பர். |
| | | | 3.3.7 ஒன்றன்பால், பலவின்பால் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைப்பர். |
| 3.4 கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். | | | 3.4.1 தனிப்படத்தையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். |
| | | | 3.4.2 தொடர்படத்தையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். |
| | | | 3.4.3 உரையாடல் தொடர்பான கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 3.5 சொல்வதை எழுதுவர். | 3.5.1 ஓரெழுத்துச் சொற்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுவர். | 3.5.3 மூவெழுத்துச் சொற்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுவர். | 3.5.4 இரு சொல் வாக்கியங்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுவர். |
| | 3.5.2 ஈரெழுத்துச் சொற்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுவர். | | |

## 4.0 செய்யுளும் மொழியணியும்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 4.1 ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.1.1 ஒன்றாம் ஆண்டுக்கான ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.1.2 இரண்டாம் ஆண்டுக்கான ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.1.3 மூன்றாம் ஆண்டுக்கான ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.2 கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.2.1 ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.2.2 இரண்டாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.2.3 மூன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.4 திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | | | 4.4.1 மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.5 இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | | 4.5.1 இரண்டாம் ஆண்டுக்கான இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர். | 4.5.2 மூன்றாம் ஆண்டுக்கான இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.7 இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | | 4.7.1 இரண்டாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | 4.7.2 மூன்றாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 4.8 மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | | | 4.8.1 மூன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.9 பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | | | 4.9.1 மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |

## 5.0 இலக்கணம்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| 5.1 எழுத்திலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.1.1 உயிர்க்குறில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| | 5.1.2 உயிர்நெடில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| | 5.1.3 வல்லின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| | 5.1.4 மெல்லின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| | 5.1.5 இடையின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| | 5.1.6 உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| | 5.1.7 உயிர்மெய் நெடில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| | 5.1.8 ஆய்த எழுத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் ஆண்டு 1 | கற்றல் தரம் ஆண்டு 2 | கற்றல் தரம் ஆண்டு 3 |
|---|---|---|---|
| | 5.1.9 தமிழ் நெடுங்கணக்கை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| 5.2 கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | 5.2.1 கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | |
| 5.3 சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.1 உயர்திணை, அஃறிணை சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.4 ஒன்றன்பால், பலவின்பால் சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.5 முதலாம், இரண்டாம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| | 5.3.2 ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | 5.3.6 மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| | 5.3.3 ஒருமை, பன்மை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | 5.3.7 காலம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.4 வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | | 5.4.1 இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகளுக்குப் பின் வலிமிகும் என்பதை அறிந்து பயன்படுத்துவர். |

**ஆண்டு 1 முதல் 3 வரை வரையறுக்கப்பட்டுள்ள செய்யுளும் மொழியணியும்**

| செய்யுளும் மொழியணியும் | ஆண்டு 1 | ஆண்டு 2 | ஆண்டு 3 |
|---|---|---|---|
| **ஆத்திசூடி** | அறஞ்செய விரும்பு.<br>ஆறுவது சினம்.<br>இயல்வது கரவேல்.<br>ஈவது விலக்கேல். | உடையது விளம்பேல்.<br>ஊக்கமது கைவிடேல்.<br>எண்ணெழுத் திகழேல்.<br>ஏற்ப திகழ்ச்சி. | ஐய மிட்டுண்.<br>ஒப்புர வொழுகு.<br>ஓதுவ தொழியேல்.<br>ஔவியம் பேசேல். |
| **கொன்றை வேந்தன்** | அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். | ஆலயம் தொழுவது சாலவும் நன்று. | ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு. |
| **திருக்குறள்** | | | இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (100)<br><br>நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது<br>அன்றே மறப்பது நன்று. (108) |
| **இணைமொழி** | | அங்கும் இங்கும்<br>அல்லும் பகலும் | அருமை பெருமை<br>அன்றும் இன்றும் |
| **மரபுத்தொடர்** | | | கை கொடுத்தல் |

| செய்யுளும் மொழியணியும் | ஆண்டு 1 | ஆண்டு 2 | ஆண்டு 3 |
|---|---|---|---|
| **இரட்டைக்கிளவி** | | கலகல<br>சலசல | மளமள<br>தகதக |
| **பழமொழிகள்** | | | ஊருடன் கூடி வாழ்.<br>சிறு துளி பெரு வெள்ளம். |

## ஆண்டு 1 முதல் 3 வரை வரையறுக்கப்பட்டுள்ள இலக்கணம்

| இலக்கணம் | ஆண்டு 1 | ஆண்டு 2 | ஆண்டு 3 |
|---|---|---|---|
| **எழுத்திலக்கணம்** | உயிர் எழுத்துகள்<br>மெய் எழுத்துகள்<br>உயிர்மெய் எழுத்துகள்<br>ஆய்த எழுத்து<br>தமிழ் நெடுங்கணக்கு | | |
| **கிரந்த எழுத்துகள்** | | பயன்பாட்டில் உள்ள கிரந்த எழுத்துகள் | |
| **சொல்லிலக்கணம்** | **திணை**<br>உயர்திணை, அஃறிணை<br><br>**பால்**<br>ஆண்பால், பெண்பால், பலர்பால்<br><br>**எண்**<br>ஒருமை, பன்மை | **பால்**<br>ஒன்றன்பால், பலவின்பால் | **காலம்**<br>இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்<br><br>**வேற்றுமை**<br>முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வேற்றுமைகள் |
| **வலிமிகும் இடங்கள்** | | | **2ஆம், 4ஆம் வேற்றுமை**<br>உருபுகளுக்குப்பின் |

# சொற்பட்டியல் (ஆண்டு 1)

**அ**

அரம்
அவர்
அம்மி
அம்பு
அரிசி
அங்கு
அழகு
அவள்
அவன்
அப்பா
அம்மா
அடுப்பு
அணில்
அரசன்
அத்தை
அட்டை
அண்ணி
அலமாரி
அக்காள்
அன்னாசி
அண்ணன்

**ஆ**

ஆடி
ஆறு
ஆடு
ஆணி
ஆமை
ஆரஞ்சு
ஆப்பிள்
ஆசிரியர்
ஆலமரம்

**இ**

இரவு
இசை
இறகு
இங்கு
இவை
இலை
இவன்
இவள்
இஞ்சி
இல்லம்
இரண்டு
இட்டலி
இறைச்சி
இறைவன்

**ஈ**

ஈ
ஈசன்

**உ**

உப்பு
உரல்
உரை
உறவினர்
உருண்டை
உரையாடல்

**ஊ**

ஊர்
ஊசி
ஊதி
ஊதா
ஊமை
ஊஞ்சல்
ஊறுகாய்

**எ**

எடு
எண்
எட்டு
எங்கு
எச்சில்
எருமை
எழுதுகோல்

**ஏ**

ஏறு
ஏடு
ஏழு
ஏன்
ஏணி

**ஐ**

ஐயா
ஐந்து
ஐப்பசி
ஐம்பது

**ஒ**

ஒரு
ஒட்டு
ஒன்று
ஒன்பது
ஒட்டகம்

**ஓ**

ஓர்
ஓலை
ஓநாய்

**க**

கடி
கதவு
கத்தி
கடை
கசப்பு
கறுப்பு
கப்பல்
கடிதம்
கத்தரி
கடவுள்
கரண்டி
கட்டில்
கணிதம்
கண்ணீர்
கடிகாரம்

**கா**

காய்
காசு
காடு
காது
காகம்
காலம்
காற்று
காலை
காளை
காளான்
காய்கறி

**கி**

கிளி
கிழவி
கிளை
கிழமை

**கீ**

கீழ்
கீரை

**கு**

குதி
குளி
குரை
குடை
குண்டு
குப்பை
குதிரை
குரங்கு
குளியல்
குருடன்
குடும்பம்
குங்குமம்
குத்துவிளக்கு

**கூ**

கூடு
கூடை
கூண்டு
கூட்டம்

**கே**

கேள்வி

**கை**

கை
கைது

**கோ**

கோழி
கோபம்
கோயில்

**ச**

சளி
சனி
சதை
சங்கு
சத்தம்
சந்தை
சட்டை
சங்கிலி
சண்டை

**சா**

சாறு
சாவி
சாப்பிடு
சாம்பார்

**சி**

சிறுமி
சித்தி
சிறகு
சிவப்பு
சிங்கம்
சிறுவன்
சிற்றப்பா
சின்னம்மா

**சீ**

சீப்பு
சீருடை

**சு**

சுகம்
சுத்தம்
சுண்டெலி

**செ**

செடி
செருப்பு
செம்பரத்தை

**சே**

சேவல்

**சை**

சைக்கிள்

**சொ**

சொல்

**சோ**

சோறு

**ஞா**

ஞாயிறு

**டு**

டுரியான்

**த**

தமிழ்
தம்பி
தயவு
தங்கம்
தங்கை
தக்காளி
தண்ணீர்

**தா**

தாய்
தாத்தா

**தி**

திடல்
திங்கள்
திருநீறு
திருடன்

**தீ**

தீ
தீபம்
தீபாவளி

**து**

துணி
துடை
துண்டு

**தூ**

தூசு
தூக்கம்

**தெ**

தென்னை

**தே**

தேன்
தேதி
தேங்காய்

**தை**

தை

**தொ**

தொப்பி
தொண்டை

**தோ**

தோடு
தோசை

**ந**

நகம்
நன்றி
நண்டு
நத்தை

**நா**

நாய்
நாள்
நான்
நாக்கு
நான்கு
நாற்காலி

**நீ**

நீர்

**நூ**

நூல்

**நெ**

நெய்
நெல்
நெற்றி
நெருப்பு

**நே**

நேரம்
நேற்று

**நோ**

நோய்

**ப**

பசி
பல்
படி
பயம்
படம்
பரிசு
படகு
பன்றி
பல்லி
பணம்
பட்டம்
பச்சை
பட்டாசு
பள்ளிக்கூடம்

**பா**

பாய்
பால்
பாம்பு
பாடம்
பாட்டி
பாவாடை

**பி**

பிட்டு
பிழை
பிணம்
பிராணி
பிள்ளை

**பு**

புழு
புளி
புண்
புயல்
புதன்
புகை
புளிப்பு
புடவை
புத்தாடை

**பூ**

பூ
பூமி
பூசை
பூட்டு

**பெ**

பெண்
பெட்டி
பென்சில்

**பே**

பேச்சு
பேரன்
பேனா

**பை**

பை
பையன்
பைத்தியம்

**பொ**

பொட்டு
பொங்கல்

**போ**

போ
போட்டி

**ம**

மடி
மரம்
மலர்
மழை
மருந்து
மஞ்சள்
மண்டை
மல்லிகை

**மா**

மாமா
மாலை
மாணவி
மாணவன்

**மி**

மின்னல்
மிட்டாய்
மிளகாய்
மிதிவண்டி

**மீ**

மீன்
மீசை

**மு**

முடி
முள்
முகம்
முடிவு
முயல்
முதுகு
முட்டை
முதலை

**மூ**

மூடி
மூக்கு
மூன்று
மூட்டை

**மெ**

மெத்தை

**மே**

மேகம்
மேலே
மேசை

**மை**

மை

**மோ**

மோதிரம்
மோட்டார்

**யா**

யார்
யானை

**ர**

ரசம்
ரயில்
ரம்புத்தான்

**ரு**

ருசி

**ரொ**

ரொட்டி

**ல**

லட்டு

**வ**

வயது
வடை
வகுப்பு
வணங்கு
வணக்கம்

**வா**

வாரம்

**வி**

விரல்
விறகு
வியாழன்

**வீ**

வீடு

**வெ**

வெயில்
வெள்ளி
வெள்ளை
வெளிச்சம்
வெங்காயம்

**வே**

வேலை

## சொற்பட்டியல் (ஆண்டு 2)

**அ**

அணி
அறிவு
அதிகம்
அடுக்கு
அமைதி
அஞ்சல்
அன்னை
அறிவிப்பு
அண்டை
அக்டோபர்
அதிகாலை
அலங்காரம்
அடையாளம்

**ஆ**

ஆண்
ஆலயம்
ஆபத்து
ஆகஸ்ட்

**இ**

இடை
இப்படி
இதயம்
இன்பம்
இந்தியர்

**ஈ**

ஈகை

**உ**

உறவு
உறுதி
உழவர்
உயர்வு
உட்கார்
உழைப்பு
உண்மை
உணவகம்

**ஊ**

ஊட்டு
ஊக்கம்

**எ**

எது
எறும்பு
எலும்பு
எண்ணெய்
எண்ணிக்கை

**ஏ**

ஏழை
ஏப்ரல்

**ஒ**

ஒலி
ஒளி
ஒருமை
ஒழுக்கம்
ஒற்றுமை

**ஓ**

ஓடு
ஓய்வு
ஓசை
ஓங்கி
ஓடை

**க**

கடல்
கடுகு
கலை
கருவி
கழுகு
கன்று
கரும்பு
கடினம்
கவனம்
கடலை
கன்னம்
கம்பளம்
கட்டுரை
கதிரவன்
கண்காட்சி

**கா**

கால்
காப்பு
காரம்
காயம்
காட்சி
காலணி
காற்றாடி
காய்ச்சல்

**கி**

கிழக்கு
கிழவன்
கிழங்கு
கிடங்கு
கிராமம்

**கீ**

கீரி
கீதம்
கீறல்

**கு**

குழு
குழல்
குளம்
குடம்
குலை
குருடு
குயில்
கும்பல்
குடிநீர்
குவியல்
குவளை
குண்டூசி
குழந்தை
குளியலறை
குப்பைத்தொட்டி

**கூ**

கூர்மை
கூடாரம்

**கெ**

கெடுதி

**கே**

கேலிச்சித்திரம்

**கை**

கைதட்டல்
கையொப்பம்

**கொ**

கொம்பு
கொடிமரம்

**கோ**

கோலி
கோலம்
கோபுரம்

**கௌ**

கௌவு

**ச**

சமம்
சபை
சந்தி
சந்தம்
சதுரம்
சட்டம்
சடங்கு
சர்க்கரை
சருகுமான்
சபைகூடல்
சவர்க்காரம்

**சா**

சாரல்
சாலை
சாதனை

**சி**

சில
சிப்பி
சிறை
சினம்
சிறப்பு
சிரிப்பு
சித்திரை
சில்லறை
சிற்றுண்டிச்சாலை

**சீ**

சீனி
சீனர்

**சு**

சுவை
சுளை
சுலபம்

**சூ**

சூடு

**செ**

செயல்
செங்கல்
செவ்வாய்
செம்பனை

**சே**

சேதம்
சேலை

**சை**

சைகை

**சொ**

சொத்து
சொர்க்கம்

**சோ**

சோப்பு
சோளம்

**த**

தடி
தப்பு
தவறு
தண்டு
தபால்
தந்தை
தடவை
தவளை
தவணை
தலைவன்
தண்டனை

**தா**

தாள்
தாதி
தாழ்வு
தாமதம்

**தி**

திருமணம்

**தீ**

தீயவன்

**து**

துணிவு
துன்பம்
துணிக்கடை

**தூ**

தூய்மை

**தெ**

தெரு
தெற்கு
தென்றல்

**தே**

தேவை
தேசிய தினம்
தேசியக்கொடி

**தை**

தைப்பூசம்

**தொ**

தொடக்கம்
தொலைபேசி

**தோ**

தோப்பு

**ந**

நண்பன்

**நா**

நாடு
நாட்டம்

**நி**

நினைவு
நிகழ்ச்சி

**நீ**

நீலம்
நீதிபதி

**நு**

நுழை

**நூ**

நூல்நிலையம்

**நே**

நேர்மை

**ப**

பனி
பத்து
படை
பருப்பு
பயிற்சி
பலகாரம்
பட்டணம்
பரிசளிப்பு
பழக்கடை
பட்டாடை
பள்ளிவாசல்
பணக்காரன்

**பா**

பாசம்
பாப்பா

**பி**

பிரிவு
பிடுங்கு
பின்னல்
பிப்ரவரி

**பீ**

பீங்கான்

**பு**

புலி
புதிர்
புற்று
புத்தகம்
புத்திசாலி

**பெ**

பெரியது
பெரியவர்

**பே**

பேர்த்தி
பேரங்காடி
பேரீச்சம்பழம்

**பொ**

பொய்
பொறுமை
பொட்டணம்
பொழுதுபோக்கு

**போ**

போர்
போல

**ம**

மண்
மயில்
மகிழ்ச்சி

**மா**

மாநிலம்
மாளிகை
மாங்காய்

**மி**

மிருகம்

**மீ**

மீதம்
மீண்டும்
மீன் வலை
மீன் தொட்டி

**மு**

முதல்
முத்து
முயற்சி
முறுக்கு

**மூ**

மூவர்
மூங்கில்

**மெ**

மென்மை

**மே**

மேளம்
மேற்கு
மேடை

**மை**

மையம்

**மொ**

மொழி
மொத்தம்

**மோ**

மோசம்
மோட்டார்வண்டி

**மௌ**

மௌலி

**யா**

யாழ்

**வ**

வலி
வயல்
வங்கி
வகை
வயிறு
வலை
வண்டு
வட்டம்
வருடம்
வண்ணம்
வகுப்பறை

**வா**

வாசி
வாடி
வாழும்
வானம்
வார்த்தை
வானொலி

**வி**

விடை
விரைவு
விளக்கு
விமானம்
விருப்பம்
விடுமுறை
விற்பனை
வியாபாரி

**வீ**

வீண்

**வெ**

வெற்றி
வெள்ளம்
வெளியே

**வே**

வேர்
வேல்
வேசம்
வேதனை
வேடிக்கை
வேண்டுகோள்

**வை**

வைரம்

# சொற்பட்டியல் (ஆண்டு 3)

**அ**

அழி
அமர்
அரை
அறை
அன்பு
அழை
அலை
அல்வா
அறிஞர்
அன்னம்
அப்பளம்
அதிரசம்
அறுசுவை
அலுவலகம்
அரண்மனை
அணிவகுப்பு
அட்டவணை
அலைவரிசை
அகல்விளக்கு

**ஆ**

ஆசி
ஆசை
ஆட்சி
ஆடை
ஆந்தை
ஆட்டம்
ஆசிரியை

**இ**

இரை
இடம்
இணை
இரவல்
இனிப்பு
இறங்கு
இயற்கை
இருக்கை
இடியப்பம்
இடைவார்

**ஈ**

ஈரம்
ஈசல்
ஈட்டி

**உ**

உச்சி
உதவி
உயரம்
உலகம்
உறக்கம்
உறைப்பு

**ஊ**

ஊற்று

**எ**

எழுத்து

**ஏ**

ஏற்றம்
ஏமாற்றம்

**ஐ**

ஐயர்
ஐவர்

**ஒ**

ஒப்பிடு
ஒலிநாடா
ஒலிபெருக்கி

**ஓ**

ஓடம்
ஓவியம்
ஓட்டுநர்

**ஔ**

ஔவை
ஔடதம்

**க**

கரி
கறி
கழுவு
கல்வி
கதை
கரிப்பு
கடமை
கணினி
கவலை
கருவாடு
கட்டடம்
கண்டிப்பு
கட்டளை
கட்டணம்
கழிப்பறை

**கா**

காவல்
காதணி
காகிதம்
காரணம்
காலுறை
காற்சட்டை

**கு**

குழி
குரல்
குளிர்
குட்டி
குடல்
குருவி
குடிசை

**கூ**

கூவு
கூடம்
கூடைப்பந்து

**கெ**

கெண்டை
கெட்டவன்

**கே**

கேசரி
கேணி
கேழ்வரகு

**கை**

கைதி
கைவிலங்கு
கையெழுத்து

**கொ**

கொடி
கொக்கு
கொண்டை
கொய்யாப்பழம்

**கோ**

கோடு
கோடரி
கோப்பை
கோட்டை

**ச**

சமை
சத்து
சட்னி
சமயம்
சந்திரன்
சந்தனம்
சல்லடை
சப்பாத்தி
சறுக்குப்பலகை

**சா**

சாணி
சாயம்
சாந்தம்
சாம்பல்
சாட்டை

**சி**

சிலர்
சிறிய
சிலை
சிலந்தி
சித்திரம்
சிறுத்தை

**சீ**

சீறும்
சீமான்
சீக்கிரம்
சீத்தாப்பழம்

**சு**

சுறா
சுமை
சுவாசம்
சுற்றுலா
சுதந்திரம்
சுற்றுப்புறம்
சுண்டுவிரல்

**சூ**

சூடம்
சூழல்
சூரியகாந்தி

**செ**

செல்
செம்பு
செவுள்
செலவு
செய்தி
செதில்
செய்யுள்
செவிமடு
செவிடன்
செம்படவன்

**சே**

சேர்
சேறு
சேவை
சேமிப்பு

**சொ**

சொறி
சொட்டு
சொந்தம்
சொத்தை

**சோ**

சோம்பல்
சோதனை

**த**

தரம்
தரை
தகவல்
தந்திரம்

**தா**

தாகம்
தானம்
தாடை
தாவணி

**தி**

திற
திரை
திட்டம்
தியாகம்
திருக்குறள்

**தீ**

தீனி
தீமை
தீ விபத்து

**து**

துவர்ப்பு
துடைப்பம்

**தூ**

தூரம்
தூண்டில்

**தெ**

தெய்வம்

**தே**

தேடு
தேநீர்
தேயிலை
தேசியகீதம்
தேசியமொழி

**தொ**

தொழில்
தொட்டி
தொலைக்காட்சி

**தோ**

தோல்வி

**ந**

நதி
நன்று
நடிப்பு
நன்மை
நற்பண்பு

**நா**

நாடகம்
நாட்டுப்பற்று

**நி**

நில்
நிலா
நிறம்
நிலம்
நிமிடம்
நிலையம்

**நீ**

நீளம்
நீரோடை
நீர்வீழ்ச்சி

**நெ**

நெல்வயல்

**நே**

நேசி

**நொ**

நொண்டி
நொறுக்கு

**ப**

பலா
பணி
பண்பு
பயணி
பந்தல்
பள்ளம்
பசுமை
பம்பரம்
பனுவல்
பப்பாளி
பயணச்சீட்டு
படுக்கையறை

**பா**

பாலம்
பானம்
பாக்கு
பாடல்

பாயசம்

பாகற்காய்

பாதுகாவலர்

**பி**

பிரதமர்

பிறந்தநாள்

**பு**

புட்டி

புத்திமதி

புத்தாண்டு

**பூ**

பூரி

பூனை

பூச்செடி

**பெ**

பெருவிரல்

பெயர்ப்பட்டை

**பே**

பேட்டி

பேரரசர்

பேருந்து

**பொ**

பொருள்

பொறுப்பாசிரியர்

**ம**

மணி

மலை

மரியாதை

மருத்துவர்

மலாய்மொழி

மலாய்க்காரர்

மருத்துவமனை

**மா**

மாடு

மாதம்

மாம்பழம்

**மி**

மின்விசிறி

மின்விளக்கு

மின்னஞ்சல்

**மீ**

மீனவர்

**மு**

முட்டு

முகவரி

**மே**

மேடு

மேம்பாடு

மேற்சட்டை

**மொ**

மொட்டு

**மோ**

மோப்பம்

**வ**

வடிவம்

வரிசை

**வா**

வாகனம்

வானவில்

**வி**

விபத்து

விலங்கு

விதிமுறை

விளம்பரம்

விருந்தினர்

விளையாட்டு

**வீ**

வீதி

வீக்கம்

**வெ**

வெந்நீர்

வெண்கட்டி

**வே**

வேடன்

**வை**

வை

வைத்தியர்

Terbitan:

BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM
KEMENTERIAN PELAJARAN MALAYSIA
Aras 4-8, Blok E9
Kompleks Kerajaan Parcel E
Pusat Pentadbiran Kerajaan Persekutuan
62604 PUTRAJAYA
Tel: 03-8884 2000 Faks: 03-8888 9917
http://www.moe.gov.my/bpk